தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 72/மா/2026

நாள்: 12.10.2026

B. சரவணன்,
சென்னை–600 017. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–10,
பெருநகர சென்னை மாநகராட்சி.
(2) S. முகமது சம்சுதீன், உரிமையாளர்,
அல்தாஃப் புட் கோர்ட்,
சென்னை–600 017. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 033, மேற்கு மாம்பலம், வாழை தோப்பு, A பிளாக் கதவு எண் 37 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 12.12.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2025 அன்று பெறப்பட்டு 72/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

ஆணை

சென்னை–600 033, மேற்கு மாம்பலம், வாழை தோப்பு, A பிளாக், கதவு எண் 37 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 12.12.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் உட்பட முகவரியிட்ட 10.12.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "பார்க்கிங் வசதிகள் இல்லாமல் ஒரு வழி பாதையில் போக்குவரத்துக்கு இடையூராக சுமார் மூன்று ஆயிரம் சதுர அடியில் கதவு எண் 43 மன்னார் தெரு, தி.நகர், சென்னை 600 017–ல் ALTHAF FOOD COURT ஓட்டல் இப்பகுதி மக்களுக்கு பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுவதால் போக்குவரத்து காவல்துறையிடம் முறையான பார்க்கிங் அனுமதி, NOC பெறாமலும் மற்றும் எவ்வித சட்டவிதிகள் எதனையும் பின்பற்றாமல் சட்ட விரோதமாக உணவகம் நடத்தி வரும் ஓட்டலுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ARO அவர்கள் வழங்கிய (உரிமத்தை) LICENCE ரத்து செய்து அக்கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் அமைக்கும்வரை பூட்டி சீல் வைக்க உத்திரவிடக் கோரி கடந்த 27–10–2025 அன்று செ.மா. ஆணையர் உதவி ஆணையர் ARO மண்டல நல அலுவலர் ஆகிய இவர்களுக்கு புகார் அளித்து எவ்வித நடவடிக்கையும் இல்லை பதிலும் இல்லை என்பதால் இம்மனுவை மேல்முறையீடு செய்கிறேன்.

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் R.T.I சட்ட ஆர்வலராக இருந்து கொண்டு பொது மக்களுக்கான பொது பணிகளை சட்ட ரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருகிறேன். மேலும் நான் தெரிவிப்பது என் வீடு அலுவலகம் செல்லும் வழியில் உள்ள சுமார் (3000) மூவாயிரம் மீட்டர் தொலைவில் கதவு எண் 43 மன்னார் தெரு, தி. நகர் சென்னை 600 017 என்கிற முகவரியில் உள்ள கட்டிடத்தில் தரை தளத்தில் சுமார் (3000) மூவாயிரம் சதுர அடியில் ALTHAF FOOD COURT ஓட்டல் சுமார் ஒரு ஆண்டுகளுக்கு முன் (துவங்கப்பட்டது) துவக்கப்பட்டது. இந்த ஓட்டல் கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் ON LINE FOOD DELIVERY நிறுவனத்தின் SWIGGY ZOMATO வின் ஊழியர்கள் கனரக இலகுரக மற்றும் இரு சக்கர வாகனங்களை நடைபாதையில் ஒரு வழி பாதையில் நடுசாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகிறது. மேலும் இவ்வோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் மேற்கூறிய வாகனங்களை சாலையில் நிறுத்தி 108 ஆம்புலன்ஸ் செல்ல தடையாகவும் இடையூறாகவும் வாகனங்களை வரிசையாக நிறுத்துவதும் சாலையை நடைபாதையை மறைத்து வாகனங்கள் விடுவதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடம் மற்றும் வீடியோவில் காணலாம்.

கடந்த 27–10–2025 அன்று செ.மா. ஆணையர் உ.ஆணையர் ARO மண்டல நல அலுவலர் ஆகிய இவர்களிடம் அளித்த புகார் மனு இம்மனுவுடன் இணைப்பு. இதுவரை எவ்வித நடவடிக்கையும் பதிலும் இல்லை என்பதால் 26.10.2025 அன்று இவ்வோட்டலுக்கு பார்க்கிங் அனுமதி பெற்று உள்ளாரா? என்று போக்குவரத்து இணை ஆணையர் அவர்களிடம் R.T.I. மனுவில் கேள்வி கேட்கப்பட்டதால் 2.12.2025 அன்று காவல் துணை ஆணையாளர் போக்குவரத்து தெற்கு மாவட்ட R.T.I. அதிகாரி அவர்கள் N.O.C. தொடர்பாக எந்தவித அனுமதியும் பார்க்கிங் வசதிகள் கோரி எந்த அனுமதியும் காவல்துறை சார்பில் சட்டபடி அனுமதி வழங்கவில்லை என்று பதில் அளித்த R.T.I மனு இம்மனுவுடன் இணைப்பு. மேலும் இவ்வோட்டலில் தீ அணைப்பு கருவிகள் பொருத்தப்படவில்லை. ஆகவே இவ்வோட்டலால் மனித உயிர்களுக்கு அதிக தீங்குகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் உட்பட எவரும் உணவு பாதுகாப்புத்துறை சட்டப்படி கையுறைகள் (GLOVE) மற்றும் தலையில் அணியும் (HEAD GLOVES) எதுவும் அணியாமலும் சுகாதார துறை சட்டப்படி இங்கு பணி செய்யும் பணியாளர்கள் தடுப்பு ஊசி செலுத்தியதற்கான ஆவண நகல் ஏதும் மக்கள் பார்வையிடும்படி வைக்கப்படவில்லை.

மேலும் இவ் ஓட்டலில் குப்பை மற்றும் உணவு கழிவுகளை சரிவர பிரித்து தரம் பிரிக்காமல் பராமரிப்பு இல்லாமலும் சுகாதாரம் இன்றி சுத்தம் இல்லாமல் உள்ளது. கிச்சன் சமையல் அறைகளும் இதே நிலை தான் உள்ளது. இக்கட்டிடம் உறுதியான நிலையில் தான் உள்ளதா? என்று அனைத்தும் நான் கூறிய புகார்கள் அனைத்தையும் நேரில் சென்று ஆய்வுகள் செய்தும் சட்டப்படி நடவடிக்கை எடுத்து இவ் ஓட்டலுக்கு சென்னை மாநகராட்சி (ARO) வழங்கிய (LICENCE) அனைத்தும் ரத்து செய்து பார்க்கிங் வசதி அமைக்கும் வரை பூட்டி சீல் வைக்க இமம்மனுவை கண்ட 17 தினங்களில் நடவடிக்கை எடுத்து உத்தரவு இட கோரி தன் நலம் பொது நலன் கருதி இம்மனு மேல்முறையீடு அளிக்கப்படுகிறது.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 30.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் தனது 14.05.2026 நாளிட்ட கடிதம் ம.அ.10 வ.து. ந.க. எண் ஆர்3/2888/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"B.சரவணன். அவர்கள் எண் 43, மன்னார் தெரு, தி. நகர், சென்னை –17ல் அமைந்துள்ள (Althaf Food Court) உணவகம் உரிமம் சம்பந்தமாக சில தகவல்கள் வேண்டி விண்ணப்பித்தார்.

15.12.2025ல் முகம்மது சம்சுதின் அவர்கள் தனது Althaf Food Court உணவகம் உரிமம் வேண்டி இவ்வலுவலகத்தில் கடிதம் அளித்தார். இதன் தொடர்ச்சியாக 24.12.2025ல் தொழில் உரிமம் வேண்டி முறையான விண்ணப்பம் அளித்தார்.

05.02.2026ல் மேற்படி விண்ணப்பத்தின் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கருத்துரை வேண்டி மண்டலநல அலுவலர் அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. மண்டலநல அலுவலர் அவர்கள் மேற்கண்ட உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்குவதாகவும் உரிமம் தர இயலாது என அறிக்கை பெறப்பட்டது.

08.04.2026ல் முகம்மது சம்சுதின் (Althaf Food Court) தங்களது உணவகத்திற்கு உரிமம் தர இயலாது எனவும் தங்களது உணவகம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பூட்டி சீல் வைக்கப்படும் என்று அறிவிப்பு கடிதம் இவ்வலுவலகம் மூலம் அனுப்பப்பட்டது.

08.11.2025ல் B. சரவணன் அவர்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன்கீழ் மேற்கண்ட உணவகம் உரிமம் சம்பந்தமாக தகவல்கள் வேண்டி மனு ஒன்றினை இவ்வலுவலகத்திற்கு அளித்தார்.

10.4.2026ல் B. சரவணன் அவர்களின் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ல் மனுவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தகவல் இவ்வலுவலகம் மூலம் அளிக்கப்பட்டது.

10.04.2026ல் மேற்கண்ட உரிமம் இன்றி இயங்கும் (Althaf Food Court) உணவகத்தினை மூடி சீல் வைப்பது தொடர்பாக அனுமதி வேண்டி மண்டல அலுவலர் மண்டலம் 10ற்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டது.

11.04.2026ல் மேற்கண்ட உரிமம் இன்றி இயங்கும் உணவகத்தை மூடி சீல் வைப்பது தொடர்பாக காவல்துறை பாதுகாப்பு வேண்டி காவல் ஆய்வாளர், தி. நகர் அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு அனுமதி தேதி வேண்டி காவல்துறையில் நிலுவையில் உள்ளது.

மேலும் இதற்கிடையில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு Election Model Code of Conduct 15.3.2026 முதல் 7.5.2026 வரை அமுலில் இருந்ததால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை.

30.3.2026 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக மேற்கண்ட எழுத்துபூர்வ அறிக்கை மற்றும் ஆவணங்களின் நகல்கள் சமர்ப்பிக்கப்படுகிறது."

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான அல்தாஃப் புட் கோர்ட் உரிமையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 01.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"அலுவலகங்கள் செல்லும் வழியில் சென்னை–17, தியாகராய நகர், மன்னார் தெரு, கதவு எண்.43 என்ற முகவரியில் தரை தளத்தில் சுமார் 3000 சதுர அடியில் ALTHAF

FOOD COURT ஓட்டல் சுமார் ஒரு ஆண்டுக்கு முன் துவக்கப்பட்டது. இந்த ஓட்டலுக்கு முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் ONLINE FOOD DELIVERY நிறுவனத்தின் SWIGGY ZOMATO வின் ஊழியர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களை நடைபாதையில் ஒரு வழி பாதையில் நடுசாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் மற்றும் 108 ஆம்புலன்ஸ் வாகனம் செல்ல தடையாகவும், இடையூறாகவும் உள்ளது.

26.10.2025 அன்று இவ்வோட்டலுக்கு பார்க்கிங் அனுமதி பெற்று உள்ளதா ? என்று போக்குவரத்து இணை ஆணையர் அவர்களிடம் R.T.I. மனுவில் கேள்வி கேட்கப்பட்டதற்கு 02.12.2025 அன்று காவல் துணை ஆணையாளர் போக்குவரத்து தெற்கு மாவட்ட R.T.I. அதிகாரி அவர்கள் N.O.C. தொடர்பாக எந்தவித அனுமதியும் பார்க்கிங் வசதிகள் கோரி எந்த அனுமதியும் காவல்துறை சார்பில் சட்டபடி அனுமதி வழங்கவில்லை என்று பதில் அளித்துள்ளார். மேலும் இவ்வோட்டலில் தீ அணைப்பு கருவிகள் பொருத்தப்படவில்லை. ஆகவே இதனால் மனித உயிர்களுக்கு அதிக தீங்குகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் உட்பட எவரும் உணவு பாதுகாப்பு, பாதுகாப்புத்துறை சட்டப்படி கையுறைகள் (HAND GLOVE) மற்றும் தலையில் அணியும் (HEAD GLOVES) எதுவும் அணியாமலும், சுகாதார துறை சட்டப்படி இங்கு பணி செய்யும் பணியாளர்கள் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது.

மேலும், உணவகத்தின் வாயிலில் கிரில் கேட் அமைத்துள்ளார்கள். அது போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

எனவே, இவ்ஓட்டலுக்கு சென்னை மாநகராட்சி (ARO) வழங்கிய LICENCE அனைத்தும் ரத்து செய்து பார்க்கிங் வசதி அமைக்கும் வரை பூட்டி சீல் வைக்குமாறும், மேலும் கடந்த 8 மாதங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், கடமையை செய்ய தவறிய உதவி வருவாய் அலுவலர், உரிமம் ஆய்வாளர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இம்மனு தொடர்பாக என்னால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.74555 of 2026 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் முதுநிலை வருவாய் அலுவலர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''(1) மனுதாரர் புகார் மனு தொடர்பாக முகம்மது சம்சுதின் அவர்கள் தனது (Althaf Food Court) உணவகத்திற்கு 24.12.2025–ல் தொழில் உரிமம் வேண்டி முறையான விண்ணப்பம் அளித்தார்.

(2) 5.2.2026ல் மேற்படி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கருத்துரை வேண்டி மண்டல நல அலுவலர் அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து மேற்கண்ட உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்குவதாகவும் உரிமம் தர இயலாது எனவும் அறிக்கை பெறப்பட்டது.

(3) 8.4.2026ல் முகம்மது சம்சுதின் (Althaf Food Court)அவர்களுக்கு தங்களது உணவகத்திற்கு உரிமம் தர இயலாது எனவும் தங்களது உணவகம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பூட்டி சீல் வைக்கப்படும் என்று அறிவிப்பு கடிதம் இவ்வலுவலகம் மூலம் அனுப்பப்பட்டது.

(4) 10.4.2026ல் மேற்கண்ட உரிமம் இன்றி இயங்கும் (Althaf Food Court) உணவகத்தினை மூடி சீல் வைப்பது தொடர்பாக அனுமதி வேண்டி மண்டல அலுவலர் மண்டலம் 10ற்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டது.

(5) 11.4.2026ல் மேற்கண்ட உரிமம் இன்றி இயங்கும் உணவகத்தை மூடி சீல் வைப்பது தொடர்பாக காவல்துறை பாதுகாப்பு வேண்டி காவல் ஆய்வாளர், தி. நகர் அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு அனுமதி தேதி வேண்டி காவல்துறையில் நிலுவையில் உள்ளது.

உணவகத்தின் உரிமையாளர் தற்போது உணவகத்தின் கட்டிடத்தை புதுப்பித்து சுகாதார முறையில் இயங்குவதாக தெரிவித்து 11.06.2026 நாளிட்ட விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனுதாரரின் புதிய விண்ணப்பம் மண்டல நல அலுவலரின் கருத்துரு கேட்டு 18.06.2026 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அவரிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான அல்தாஃப் புட் கோர்ட் உரிமையாளர் திரு. அ. முகமது சம்சுதீன் என்பவர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை 17, தியாகராய நகர், மன்னார் தெரு, கதவு எண்.43–ல் அமைந்துள்ள ALTHAF FOOD COURT ஓட்டல் கடந்த 3 வருடங்களாக நடத்தி வருகிறேன். மனுதாரரின் புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தாக்கீது வழங்கப்பட்டது.

தாக்கீது வழங்கப்பட்டப்பின் என்னுடைய உணவகத்தின் கட்டிடத்தை புதுப்பித்து சுகாதார முறையில் இயங்கி வருகிறது. எனவே, உரிமம் கோரி 11.06.2026 நாளிட்ட விண்ணப்பம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் அளித்துள்ளேன்.

மேலும், அருகில் உள்ள ஓட்டல் சங்கம் உரிமையாளரிடம் எனது உணவகத்திற்கு வரும் வாடிகையாளர்களின் வாகனங்களை நிறுத்த அனுமதி பெற்றுள்ளேன். மேலும், GST – Certifcate முறையாக பெற்றுள்ளேன் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எங்களது உணவகம் மீதான நடவடிக்கையினை ரத்து செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான அல்தாஃப் புட் கோர்ட் உரிமையாளர் திரு. அ. முகமது சம்சுதீன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–17, தியாகராய நகர், மன்னார் தெரு, கதவு எண்.43 என்ற முகவரியில் தரை தளத்தில் சுமார் 3000 சதுர அடியில் ALTHAF FOOD COURT ஓட்டலுக்கு முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும்

ONLINE FOOD DELIVERY நிறுவனத்தின் SWIGGY ZOMATO ஊழியர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களை நடுசாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் மற்றும் 108 ஆம்புலன்ஸ் வாகனம் செல்ல தடையாகவும், இடையூறாகவும் உள்ளது என்பதும், இவ்வோட்டலுக்கு பார்க்கிங் வசதிகள் குறித்து எந்தவித அனுமதியும் காவல்துறை சார்பில் வழங்கவில்லை என்று பதிலளிக்கப்பட்டுள்ளது என்பதும், இவ்வோட்டலில் தீ அணைப்பு கருவிகள் பொருத்தாததால், மனித உயிர்களுக்கு அதிக தீங்குகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்பதும், இவ்வோட்டலில் பணிபுரியும் ஊழியர்கள் உட்பட எவரும் உணவு பாதுகாப்பு, தொடர்பான கையுறைகள் மற்றும் தலையில் அணியும் உறைகள் எதுவும் அணிவதில்லை மற்றும் சுகாதார துறை சட்டப்படி அவர்களுக்கு தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளவில்லை என்பது தெரிய வருகிறது என்பதும், உணவகத்தின் வாயிலில் அமைக்கப்பட்ட கிரில் கேட் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது என்பதும், இவ்வோட்டலுக்கு சென்னை மாநகராட்சி வழங்கிய உரிமம் அனைத்தையும் ரத்து செய்து, பார்க்கிங் வசதி அமைக்கும் வரை பூட்டி சீல் வைக்குமாறும் மற்றும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கடமையை செய்ய தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பதும், இம்மனு தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.74555 of 2026 தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Althaf Food Court உணவகத்தின் உரிமையாளர், தொழில் உரிமம் வேண்டி முறையாக விண்ணப்பம் பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–லிருந்து மண்டல நல அலுவலருக்கு அனுப்பப்பட்டு, மண்டல நல அலுவலர் மேற்கண்ட உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்குவதாகவும் உரிமம் தர இயலாது என அறிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில், மேற்கண்ட உணவகத்திற்கு உரிமம் தர இயலாது எனவும், இவ்வுணவகத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பூட்டி சீல் வைக்கப்படும் என்ற அறிவிப்பு கடிதம் Althaf Food Court உணவகத்தின் உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது என்பதும், மேலும், Althaf Food Court உணவகத்தினை மூடி சீல் வைப்பது தொடர்பாக மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் அனுமதி பெறப்பட்டது என்பதும், மேற்கண்ட உரிமம் இன்றி இயங்கும் உணவகத்தை மூடி சீல் வைப்பது தொடர்பாக காவல்துறை பாதுகாப்பு வேண்டி தி. நகர் காவல் ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அனுமதி தேதி வேண்டி காவல்துறையில் நிலுவையில் உள்ளது என்பதும், உணவகத்தின் உரிமையாளர் தற்போது உணவகத்தின் கட்டிடத்தை புதுப்பித்து சுகாதார முறையில் இயங்குவதாக தெரிவித்துள்ளார் என்பதும், மனுதாரரின் புதிய விண்ணப்பத்தின் மீது மண்டல நல அலுவலரின் கருத்துரு கோரப்பட்டுள்ளதாகவும், அவரிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை 17, தியாகராய நகர், மன்னார் தெரு, கதவு எண்.43–ல் அமைந்துள்ள ALTHAF FOOD COURT ஓட்டல் கடந்த 3 வருடங்களாக இயங்கி வருகிறது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் தாக்கீது வழங்கப்பட்டதற்கு பின்பு, தன்னுடைய உணவகத்தின் கட்டிடத்தை புதுப்பித்து சுகாதார முறையில் இயங்கி வருகிறது என்பதும், உரிமம் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், அருகில் உள்ள ஓட்டல் சங்கம் உரிமையாளரிடம் தனது உணவகத்திற்கு வரும் வாடிகையாளர்களின் வாகனங்களை நிறுத்த அனுமதியும் பெறப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம்

எதிர்மனுதாரரான Althaf Food Court உணவகத்தின் உரிமையாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், சென்னை–17, தியாகராய நகர், மன்னார் தெரு, கதவு எண்.43 என்ற முகவரியில் தரை தளத்தில் சுமார் 3000 சதுர அடியில் ALTHAF FOOD COURT ஓட்டலுக்கு முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாமலும், தொழில் உரிமம் பெறாமலும், தீயணைப்பான் கருவிகள் பொருத்தப்படாமலும் இயங்கி வருவதாலும், தனது புகார் மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால், இதுகுறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.74555 of 2026–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்று மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ள கருத்தில் கொள்ளப்பட்டது.

> The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
> Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--
>
> (a) xxx xxx
>
> any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
>
> (c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 37, A பிளாக்,
வாழை தோப்பு,
மேற்கு மாம்பலம்,
சென்னை–600 033.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 64, N.S.K. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) திரு. அ. முகமது சம்சுதீன்,
உரிமையாளர்,
Althaf Food Court,
கதவு எண் 19, மணியம்மை தெரு,
காமராஜபுரம்,
சென்னை–600 073.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 16/10/26

21/10